# 24 பரிசுத்தமான வாழ்வை நோக்கி

மகா பரிசுத்தம் என்பது கடவுளுக்கு மாத்திரம் சொந்தமான விடய மாகும். பரிசுத்தத்தைக் குறித்தும் அது எமது வாழ்விற்கு எவ்வாறு பொருத்தமாக அமையும் என்பதைக் குறித்தும் இப்பாடத்தில் ஆராய்வோம்.

*எசாயா* **6:1-8**

## எசாயாவின் அழைப்பின் பின்னணி

எசாயா 6ம் அதிகாரத்தின் பின்னணி, கி.மு எட்டாம் நூற்றாண்டில் இஸ்ரயேலின் தெற்கு இராச்சிய காலமாகும். அசிரிய பேரரசால் தெற்கில் யூதாவிற்கு பலத்த அரசியல் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. அதன் பின் சிரியாவினாலும் இஸ்ரயேல் இராச்சியத்தாலும் படையெடுக்கும் அச்சுறுத்தல் காணப்பட்டது. எசாயாவின் அழைப்பு இவ்வாறான பின்னணியில் இறைவாக்குரைக்கும் பணிக்காகக் கொடுக்கப்பட்ட ஓர் அழைப்பாகும். கடவுளுக்குக் கீழ்ப்படியாமை உட்பட அவரிலே நம்பிக்கை கொள்ளாமை மக்களது மனங்கள் மாசுறுவதற்கான காரணங்களாயின. அந்நிலையில் எசாயா கடவுள் எதிர்பார்க்கும் 'பரிசுத்தத்தை' குறித்து இறைவாக்குரைத்தார்.

## எசாயாவின் அழைப்பு

எசாயா பரிசுத்த ஆலயத்தில் இருக்கும் போதே அழைப்பினைப் பெறுகிறார். அவர் கண்ட தரிசனத்தால் கடவுள் பரிசுத்த ஆலயத்திற்குள் அவர் செய்த அனைத்துப் பாவங்களையும் மன்னித்து இறைவாக்குப் பணிக்காக அவரை அர்ப்பணிக்கின்றார்.

எசாயா கண்ட காட்சியில் கடவுள் ஆலயத்தின் உயரமான அரியணையில் அமர்ந் திருந்தார். அவரைச் சுற்றியிருந்த சேராபீன்கள் அவருடைய பரிசுத்தத்தை மூன்று முறை சத்தமிட்டுப் பாடின. இதனால் வெளிப்படுவது யாதெனில் பரிசுத்தம் என்பது கடவுளுக்கு மாத்திரம் உரித்துடையதென்பதாகும்.

அவ்வேளையில் எசாயா, தான் ஒரு 'பிரயோஜனமற்றவன்' என்றும் 'தூய்மையற்ற உதடுகளை' கொண்டு மக்கள் நடுவில் வாழ்பவன் என்றும் கூறுகிறார். இதன் மூலம் கடவுளின் மகா பரிசுத்தத்திற்கு முன்னால் தன்னுடைய பாவ இயல்பு ஆழமாக உணர்த்தப்படுவதைக் காணலாம். (எசாயா 6: 5)

இந்த தரிசனத்தில் அடுத்ததாக நெருப்புப் பொறி எசாயாவின் வாயைத் தொட்டு அவருடைய பாவத்தை மன்னித்து, அவருடைய குற்றப்பழி அவரை விட்டு நீங்குவ தாகக் கூறப்படுகிறது. அதாவது கடவுள் பரிசுத்தமற்ற பாவியாகிய மனிதரை புறம் தள்ளாது ஏற்கிறார். இவ்வாறு கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படும் மனிதர் மன்னிப்பைப் பெறுவது மாத்திரமல்ல அதனை விட மேலதிகமான கொடை ஒன்றையும் கடவு ளிடமிருந்து பெறுவர். அவ்வாறு நடப்பது அவர் தமது பாவங்களைக் குறித்து உண் மையான புரிந்துணர்வுடன் வந்தால் மாத்திரமேயாகும். அதாவது மகா பரிசுத்தமுள்ள கடவுள் மனிதருக்கு அருளும் பரிசுத்தமான வாழ்க்கையே அக் கொடையாகும்.

### *பரிசுத்தமான வாழ்வைப் பெற முடியுமா?*

எசாயாவுக்கு கடவுள் கொடுக்கும் பரிசுத்தம், கடவுளுடைய இறைவாக் குரைக்கும் பணியை மக்களிடம் கொண்டு செல்பவராக இருப்பதற்காகும். அதாவது கடவுளின் குரலை மக்களுக்குத் தெரியப்படுத்தலாகும். அது கடினமான காரியமும் பாரதூரமானதுமாகும். இருப்பினும் அதற்காகக் கடவுள் அவரில் பரிசுத்தத்தை உறுதிப்படுத்தினார். அவர் அவருடைய பாவங்களைக் குறித்தும் மக்களின் பரிசுத்த மின்மையைக் குறித்தும், நல்ல புரிந்துணர்வோடு கடவுளின் விருப்பத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார்.

எமக்குத் தேவையான பரிசுத்தம் எதுவாக இருக்க வேண்டும்? எசாயாவுக்கு அந்த பரிசுத்தம் கிடைப்பது கடவுளுடைய பணியை மனிதர் மத்தியிலே நிறை வேற்றவேயாகும். ‘‘இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்’’ (எசாயா 6:8) எனும் பதில் மூலம் இது உறுதிப் படுத்தப்படுகிறது. எங்களுடைய பாவ நிலை பாரதூரமானதாக இருந்தால் பரிசுத்தத்திற்காக நாங்கள் விண்ணப்பம் செய்ய முடியுமா? ஆம் முடியும்.

இருப்பினும் நாம் அந்தப் பரிசுத்தத்தைக் கடவுளிடம் வேண்டுவது எம்மைப் பெருமை பாராட்டிக்கொள்ளும் நோக்கத்திலாகவிருந்தால் அந்தப் பரிசுத்தம் எமக்குக் கிட்டாது. மேலும் அது தானாகக் கிடைக்கும் அல்லது கிறிஸ்தவர்களாக இருக் கின்றபடியால் கிடைக்கப்பெறும் விடயமல்ல. மாறாக அந்தப் பரிசுத்தத்தை நாம் பாவிகள் என உணர்வதன் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அப்போது நாம் எம்முடையவர்களல்ல கடவுளுக்கு மாத்திரமே சொந்தமாவோம். இவ்வாறு நாம் கடவுளுக்குச் சொந்தமானவர்களாகி வழி தவறாமல் சமூகத்திலே செயலாற்றுவோம்.

அவ்வாறு தாவீது அரசனும் கடவுளின் மகா பரிசுத்தத்திற்கு முன்னால் தன் பாவத்தின் பாரதூரத்தைப் புரிந்துக்கொண்டான். கடவுள் தொடர்ந்தும் தம்மோடு இல்லை என்பது பத்சேபா தொடர்புடைய பாவத்திற்குப் பின்னதாக உணர்ந்தான். மேலும் தன் அரசாட்சியின் வல்லமையால் எந்தப் பிரயோஜனமும் இல்லையென்பதை உணர்ந்து கொண்டான். அவ்வாறு சாத்தானின் சோதனைகளுக்கு அவன் மிகவும் கட்டுண்டவனாக இருக்கிறான் என்பதை உணர்ந்தான். அவனுக்கு கடவுளிடமிருந்து

‘தூயதோர் உள்ளம்’ தேவைப்பட்டதற்கான காரணம் அதுவாகும். மற்றைய எல்லாக் காரியங்களையும் விட கடவுளோடு உண்மையான உறவுக்குள் செல்வதற்கு அவனை வருத்தும் ஓர் தேவை இருந்தது. எனவே அவன் கடவுளை நோக்கி இவ்வாறு வேண்டுகிறான்.

‘என் தீவினை முற்றிலும் நீங்கும் படி என்னைக் கழுவியருளும்’ (திருப்பாடல்கள் 51:2)
‘கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்’ (திருப்பாடல்கள் 51:10)

கடவுளிடம் தூய வாழ்வைப் பெறும் மனிதர் எல்லா நேரங்களிலும் சமூக நலனுக்காகச் செயலாற்றுவர். அவர் கடவுளுக்கு விருப்பமானதைச் செய்பவராக மாறுவர். இது எசாயாவுக்கு நடந்தது போல யாருக்கும் நடக்கக்கூடிய ஓர் முக்கியமான செயற்பாடாகும். அதை அனுபவிக்க கடவுள் எமக்கு துணை புரிவாராக.

அவ்வாறான வாழ்க்கையை வாழ தூய ஆவியானவரின் வழிநடத்தலில் பெலனடைவோம்.

**செயற்பாடு**

01. எசாயாவின் அழைப்பிற்குள் பரிசுத்தத்தைக் குறித்து நீர் கற்றுக்கொண்ட சில விடயங்களை குறிப்பிடுக.

02. பாடசாலையில் உம்மை சோதனைக்குட்படுத்துவதும், பரிசுத்த வாழ்வுக்கு தடையாக இருக்கின்றதுமான 5 விடயங்களைக் குறிப்பிடுக.